District Munsif Court, Palani.
O.S.No.114/2022

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

முன்னிலை: திரு.என்.ஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 07 ஆம் நாள் திங்கள்கிழமை.

அ.வ.எண்.114/2022
--------

எம்.செல்லமுத்து .. வாதி

/எதிர்/

1.தர்மராஜ்,
2.கார்த்தி,
3.மாவட்ட ஆட்சியர்,
திண்டுக்கல்.
4.வட்டாட்சியர்,
பழனி.
5.கிராம நிர்வாக அலுவலர்,
தொப்பம்பட்டி. .. பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்தும், என் முன்பாக வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.செல்வக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ஜெயராமன் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும, இவ்வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு, இன்று விசாரணைக்கு வந்தபோது, வாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும், வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

தீர்ப்புரை

பிராது சொத்திற்கு செல்லக்கூடியதும், பிராது மாதிரி வரைபடத்தில் சிவப்பு வண்ணமிட்டு காண்பிக்கப்பட்டுள்ள 12 அடி அகலம், 300 அடி நீளம்

கொண்ட பொதுப்பாதையான சர்வே எண்.527–ல் தொடங்கி, சர்வே எண்.502, 503, 504–யை கடந்து வாதி நடந்து சென்றும், ஆடு, மாடு, வாகன ஊர்திகள் சென்று வருவதை 1, 2 பிரதிவாதிகள் எந்த வகையிலும் தடுத்து நிறுத்தவோ அல்லது மேற்படி பாதையை அழித்து ஆக்கிரமிப்பு செய்யவோ மற்றும் கற்கள் ஊன்றி வழிமறிக்கவோ கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படி கோரியும், தாவா செலவு தொகையை வாதிக்கு, 1,2 பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் வாதியால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு, இன்று விசாரணைக்கு வந்தபோது, வாதி அழைக்கப்பட்டு ஆஜராரில்லை. வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. எனவே, இவ்வழக்கானது வாதியின் தவறுகைக்காக பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 07.08.2023 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N GNANASAMBANDAM
Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.08.09 17:26:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.